# 13

# ஒவ்வொரு நாளும் தேவனுக்கு இடம் அளித்தல் [4:13–17]

*1987ம் ஆண்டின் வசந்தகாலம், மன எழுச்சி மிக்க உலக நிகழ்ச்சிகள் சிலவற்றை அளித்தது. ஒவ்வொருவர் மனதிலும் நிலைத்து நிற்க வேண்டியதான குறிப்பான இரு விஷயங்ளை நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர முடியும். முதலாவது, பங்குச் சந்தையானது அக்டோபர் மாதத்தின் ஒரு திங்கள் கிழமையன்று ஐநூரு புள்ளிகளுக்கு மேல் நொறுங்கி வீழ்ச்சியடைந்த நிகழ்வாகும். அதிர்ச்சியடைந்த மக்கள், இழந்துபோன தங்கள் செல்வம் மற்றும் முறிந்துபோன தங்கள் கனவுகள் பற்றி எல்லாப் பகுதிகளிலும் புலம்பினர். திகைப்படைந்த பங்குத் தரகர்கள், தங்கள் நிதிநிலை விளையாட்டுக் களங்கள் கீழேநோக்கி இடறிச் செல்வதை கண்டனர். பல வாரங்களாக, தொலைத்தொடர்பு ஊடகங்கள், இந்த நஷ்டம் ஏன் ஏற்பட்டது என்று புரிந்து கொள்ள முயற்சிப்பதில் தங்கள் முயற்சிகளைக் கவனம் குவித்தன. இரண்டாவது முக்கிய நிகழ்வு, ரொனால்டு ரீகன் மற்றும் மிக்கயீல் கோர்பச்சேவ் ஆகியோருக்கு இடையில் நடந்த "உச்சி மாநாடு" ஆகும். இந்நச் சந்திப்பின்போது, சமாதானத்திற்கான சாலையில் ஒரு மைல் கல்லாக இருந்த அல்லது இருக்கும் என்று யூகிக்கப்பட்ட, அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்று அடையப்பட்டது. அந்த உடன்படிக்கையானது ரஷ்ய மற்றும் அமெரிக்க அரசுகளால் அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலும், அதில் உள்ள சில விஷயங்கள் தனித்து நிற்கின்றன. முதலாவது, "வல்லரசுகள்" கடந்த முப்பது ஆண்டுகளில் ஒரு உடன்படிக்கையில் கையெழுத் திட்ட ஒவ்வொரு வேளையிலும், அது ஆயுதங்களின் மீது செலவழித்தல் என்பது உயரத்தொடங்குதலே என்ற நிகழ்வைச் சமிக்கை செய்துள்ளது. இந்த உடன்படிக்கை எதை அர்த்தப்படுத்தி யது என்பது, ஒவ்வொரு பகுதியும் தனது படையை ஒரு நூறுபேர் மாத்திரம் என்ற அளவுக்குக் குறைத்த வேளையிலும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஆயுதங்கள் அழிப்பிற்குப் பின்னரும், அவர்கள் ஒவ்வொருவரும் மூன்று அல்லது நான்கு முறைகள் இந்த உலகத்தை அழிக்கப்போதுமான அளவு அணு ஆயுதப் போர்த்தலைகளைக் கொண்டிருப்பார்கள்.*

*இந்த பாடம், அணு ஆயுதங்கள் அல்லது பொருளாதாரம் பற்றிய பாடமாக இருக்க நோக்கங் கொண்டிருப்பதில்லை, ஆனால் இந்த நிகழ்ச்சிகள், ஒரு சில உண்மைகளைச் சுட்டிக் காண்பிக்கின்றன. முதலாவது, பொருளாதார உடைமைகள் இன்றிருந்து நாளை கடந்து சென்று விடக்கூடும் என்பதாகும். இரண்டாவது, நமது உடல்ரீதியான இருப்பு என்பது, அணுகுண்டின் நிழலில் வாழப்படுகிறது, மற்றும் உலக அரசியலின் இயல்பானது மிகவும் அச்சமுட்டுவதாக உள்ளது என்பதாகும். நாம் அந்த இரு பாடங்களை மனதில் கொண்ட நிலையில், வாழ்வு மற்றும் வாழ்வின் விஷயங்கள்மீது நமது நம்பிக்கையை வைக்க முடியாது*

என்பதைக் காண முடியும். இந்த சத்தியத்தை நாம், வாழ்வின் மாபெரும் அளவியின்மீது காண முடியும், ஆனால் நமது தனிப்பட்ட வாழ்வு பற்றிய விஷயம் என்ன? "எதிர்காலத்திற்கான உங்கள் கனவுகள் யாவை?" என்பது உங்களிடம் கேட்கப்பட்டால், நீங்கள் எவ்வாறு பதில் அளிப்பீர்கள்? கல்வி? திருமணம்? குடும்பம்? தொலைதூர இடங்களுக்குப் பயணம்? ஒரு புதிய கார்? செல்வம்? இந்த கனவுகள் யாவற்றிலும், தேவன் மற்றும் ஆவிக்குரியவை பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள் எவ்விடத்தில் பொருந்துகின்றன? மக்களில் மிகப்பலர், எதிர்காலம் குறித்து ஒரே ஒரு வலியுறுத்தம் மாத்திரமே கொண்டுள்ளனர்: "பௌதீகரீதியான நிறைவேற்றம்!" நமது எதிர்காலத் திட்டத்தில் நாம் தேவனை வெளியேற்றும் அளவுக்கு பூமியுடன் அதிகம் பிணைக்கப்பட்டவர்களாக இருக்க வயப்பட்டுள்ளோம்.

4ம் அதிகாரத்தின் முடிவில், "தேவனுடைய சித்தம்" பற்றி யாக்கோபு கலந்துரையாடுகிறார். இந்த அதிகாரத்தில் ஏற்கனவே அவர், சபைப் பிரச்சனைகள் மற்றும் ஒருவர் பிறருக்கு எதிராகப் பேசுதல் ஆகியவற்றைப் பற்றிப் பேசியிருக்கிறார். இப்போது யாக்கோபு, அந்த ஆய்வுக்கருத்துகளை "தேவனுடைய சித்தம்" பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஒன்றாகக் குவிக்கிறார். தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே உள்ள விசுவாசி கலகம் செய்பவராகிறார் என்பது தெளிவு. இந்த சத்தியம், வேதாகம வரலாற்றின் உதாரணங்களினால் விவரிக்கப்படுகிறது: லோத்து என்பவர் சோதோமுக்கு குடியேறி, தமது குடும்பத்தை ஏறக்குறைய சிதிலமடையச் செய்தார், தாவீதின் விபசாரம் அவரது குடும்பத்திற்கும் இராஜ்யத்திற்கும் பிரச்சனைகளைக் கொண்டுவந்தது, மற்றும் யோனா தேவனை விட்டு ஓடிய விஷயமானது, கப்பலையும் அதன் பயணிகளையும் ஏறக்குறைய அழித்தது. இந்த ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், தேவனுடைய சித்தத்திற்கு எதிரான ஒரு தவறான எண்ணப்போக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

நமது முரட்டுத்தனம் மற்றும் சுயநிறைவு ஆகியவை பற்றிக்கடிந்துகொள்ளும்படி, யாக்கோபுவை இப்போது பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார். நாம் தேவனைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்படி வாழ்வு, தன்னில்தானே வற்புறுத்துகிறது என்பதை நாம் காண வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் நமது அன்றாட வாழ்விலிருந்து தேவனை விலக்கி வைக்க இயலாது மற்றும் நாம் அவரது சித்தம்பற்றி அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து வரையிலும் அவர் நம்மைத் தள்ளுகிறார்.

## தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் அறிவற்றதாக உள்ளது (4:13-16)

தேவனுடைய சித்தத்தை நமது அன்றாட வாழ்வில் புறக்கணித்தல் என்பது எவ்வளவு மதியீனமாக உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு, நாம் ஏன் தேவன் கூறுவதைக் கவனிக்க வேண்டும் என்பதற்கான நான்கு காரணங்களை யாக்கோபு முன்வைக்கிறார். முதலாவது, *நாம் வாழும் வாழ்வு மிகவும் சிக்கலானதாக இருப்பதால்* தேவனுடைய சித்தத்தை நாம் கவனிக்க வேண்டும். 13ம் வசனத்தில் அவர், "மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரஞ்செய்து

சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே," என்று கூறும் போது, அவர் "நின்று உங்களை நீங்களே கவனியுங்கள்" என்று கூறுகிறார். நமது வாழ்வைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாக: நாம் வாங்குகிறோம், விற்கிறோம், ஆதாயம் பெறுகிறோம், இழந்துபோகிறோம், இங்கு செல்கிறோம் அங்கு செல்கிறோம். ஒவ்வொருநாளிலும் நாம், முக்கியமான முடிவுகள் எத்தனை ஏற்படுத்துகிறோம்? யாக்கோபுவின் மூலமாகத் தேவன், வாழ்வின் வேலை எதையும் கண்டனம் பண்ணுவதில்லை, ஆனால் அவரை ஆலோசனை கேட்காமல் அவற்றைச் செய்தல் என்பது எவ்வளவு மதியீனமாக உள்ளதென்பதையே அவர் கூறுகிறார். தேவன் உடன் இருக்கையில் வாழ்வு கருத்தை ஏற்படுத்துகிறது; அவரின்றி அது மதியீனத்தையே ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக யாக்கோபு, வாழ்வு என்பது சிக்கலானதாக மாத்திரமல்ல, *அது நிச்சயமற்றதாகவும் உள்ளது* என்று கூறுகிறார். அவர் "நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே" என்று கூறுகிறார் (4:14). வாழ்வு நிச்சய மற்றது என்று நாம் அறிய வேண்டுமென்று வேதவசனம் விரும்புகிறது (எ.கா., நீதிமொழிகள் 27:1). இயேசு, தமது உவமைகள் ஒன்றில் அந்தக் கருத்தை விவரித்தார் (லூக்கா 12:16-21). உலகமானது வாழ்வைப் பற்றிய தனது நெறிபிறழ்வான கண்ணோட்டத்துடன்கூட, இந்த அடிப்படைக் கருத்தை புரிந்துகொண்டுள்ளது. ரோமாபுரியில் இருந்த தத்துவஞானியான செனெகா என்பவர், "நாளையதினம்கூட ஒரு மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லா திருக்கையில், அவன் தனது வாழ்விற்காகத் திட்டங்கள் தீட்டுதல் என்பது எவ்வளவு மதியீனமானதாக உள்ளது" என்று கூறியதில் புகழ் மிக்கவரானார். வாழ்வின் சூழ்நிலைகள், நாம் அறிகிற மற்றும் அறிந்திருக்கிற மக்கள், மற்றும் அன்றாட வாழ்வில் நாம் காணும் நிகழ்ச்சிகள் ஆகியவை யாவும் இந்த சத்தி யத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நிச்சயமற்ற நமது எதிர்காலத்தின் காரண மாக, நாம் சும்மா உட்கார்ந்துகொண்டு ஒன்றும் செய்யாதிருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுவதில்லை. நாம் நமது திட்டங்களையும் எதிர்காலத்தையும் தேவனுடைய கரங்களில் ஒப்புவிக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். நாம் நமது எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஒப்புவிக்கும்போது மாத்திரமே, எதிர் காலத்தைப் பற்றிய எவ்வித நிச்சயத்தையாவது நாம் கொண்டிருக்க முடியும்.

அடுத்தபடியாக யாக்கோபு, வாழ்வு *சுருக்கமானதாக இருப்பதால்* அது நிச்சயமற்றதாக உள்ளது என்று விளக்குகிறார். 14ம் வசனத்தின் பிற்பகுதியில் "கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" என்று அவர் கூறும்போது, யோபுவின் எழுத்துகளில் இருந்து ஒரு உருவகத்தை அவர் கடனாகப் பெறுகிறார் (யோபு 7:9). சிலவேளைகளில், விசேஷமாக, வேதனையின் நாட்களின்போது, நாட்கள் யோபுவைப் பொறுத்தமட்டில் முடிவற்ற வகையில் இழுத்துக்கொண்டு சென்றன என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன். அவர் தமது கடும் வேதனையில், வாழ்வானது எவ்வளவு சுருக்கமாக இருக்க முடிந்திருக்கும் என்பது பற்றித் துரதிர்ஷ்டவசமாக அறியாதவராக இருந்தார் (யோபு 7:6; 8:9; 9:25; 14:1, 2). காலத்தைக் கணக்கிடுவதற்கான எல்லைக்குட்பட்ட நமது வழியில், வாழ்வானது இன்னமும் நீண்டதாக, தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டி இருப்பதை நாம் மறந்துபோகப் போதிய அளவு நீண்டதாகக் காணப்படலாம். நாம் உடல் நலமற்று இருத்தலைப் போன்று உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று

நான் கருத்துத் தெரிவிப்பது இல்லை, ஆனால் நாம் நமது வாழ்வைப் பற்றிய சத்தியத்தை உணர்ந்தறிவது அவசியமாக உள்ளது. நமது வாழ்வைச் செலவழித்தல் அல்லது வீணாக்குதல் என்பதற்குப் பதிலாக, நாம் நமது வாழ்வை நித்தியத்திற்கு உரிய விஷயங்களில் *முதலீடு செய்தல்* அவசியமாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருத்தல் மூலமாக நமது வாழ்வை முதலீடு செய்கிறோம்.

நான்காவதாக, 16ம் வசனத்தில் யாக்கோபு, மனிதன் தமது அற்பமான தன்மையை மறைக்க எவ்வாறு முயற்சி செய்கிறான் என்று விவரிக்கிறார். அவர், "இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது" என்று கூறுகிறார். நமது சுய பலவீனங்களையும் பாதுகாப்பின்மைகளையும் மூடுவதற்காக நாம் மேன்மை பாராட்டுகிறோம். எதிர்காலத்தைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? அதற்குள் கண்ணோக்க நாம் பலம் கொண்டிருப்பதில்லை அல்லது அதைக் கட்டுப்படுத்துவதற்கான ஞானத்தை நாம் கொண்டிருப்பதில்லை. இருப்பினும் நாம் முற்றிலும் கட்டுப்பாடு செலுத்துபவர்களாக இருப்பது போன்று நாம் பெருமையடித்து ஏளனம் செய்கிறோம். நாம் நம்மைத் தேவனுடைய இடத்தில் வைக்கிறோம் என்பதே நமது மேன்மைபாராட்டுதலின் பிரச்சனையாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், எதிர் காலத்தில் இதை அல்லது அதைச் செய்வோம் என்று கூறுவதன் மூலமாக இதை நாம் செய்கிறோம். அப்படிப்பட்ட மேன்மை பாராட்டுதல் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று தெளிவாகவும் எளிதாகவும் யாக்கோபு கூறுகிறார்!

ஆண்டுகளினூடே மனிதன் கற்றுக்கொண்டுள்ள இந்தப் பாடங்கள் எல்லாவற்றுடனும், அவன் தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் எவ்வளவு மதியீனமானதாக உள்ளது என்று அறிந்திருப்பான் என்று ஒருவர் நினைக்கலாம். அது வரைபடமற்ற ஒரு வனத்தினூடே வழிகாட்டி இல்லாது செல்லுதல் அல்லது புயல்வீசும் கடலின்மீது திசைக்காட்டிக் கருவி இல்லாது பாய்ந்து ஓடுதலைப்போன்றதாக உள்ளது. யாக்கோபு, வாழ்க்கைக் குறித்த நமது எண்ணப்போக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பின்வரும் குறுகிய, ஆற்றல் வாய்ந்த கூற்றில் நமக்குக் கூறுகிறார்: "ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதை செய்வோம் என்று சொல்ல வேண்டும்" (4:15). இந்தக் கூற்றை யாக்கோபு நாம் சிந்தனையின்றித் திரும்ப திரும்பக் கூறுகிறதான ஒரு சடங்காச்சாரமான, ஒரு எளிமைப்படுத்தப்பட்ட சூத்திரமாக தருவது இல்லை. இது இருதயத்தின் எண்ணப்போக்காக இருக்க வேண்டும், வெளிப்படையாக கூறப்பட்ட போதிலும் அல்லது மறைமுகமாக உணர்த்தப்பட்ட போதிலும் அது, நமது வாழ்வில் திட்டமிடும் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் தேவனுக்கு உரிமையுள்ள இடத்தை அவருக்குக் கொடுக்கிறது என்று அவர் கூறுகிறார்.

## தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் பாவம் நிறைந்ததாக உள்ளது (4:17)

யாக்கோபு 4:17 வசனமானது, ஏறக்குறைய ஒவ்வொரு பிரசங்கியாராலும் பயன்படுத்தப்படும் சவைக்குச்சி ஆகியுள்ளது. யாக்கோபு, "ஆதலால்,

ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்'' என்று கூறும்போது, அவர் எந்த ஒரு பாடக்கருத்தைக் குறித்தும் சகோதரர்களை சாட்டையால் அடிப்பதற்கான ஒரு வசனத்தைப் பிரசங்கியாருக்குக் கொடுத்தார். இது அந்த வேளையில் பேச்சாளர் தூண்டக்கூடிய கருத்து எதுவாக இருப்பினும் அதைப்பற்றிய உண்மையாக மிகவும் குறிப்பாகக் காணப்படுகிறது: ஆராதனை ஊழியங்களில் கலந்து கொள்ளுதல், ஆத்தும ஆதாயம் முதலியன. அவ்வாறு இவ்வசனத்தைப் பயன்படுத்துதல் என்பது தர்க்கரீதியானதாக மற்றும் சரியானதாகக் கூட இருக்கலாம், ஆனால் யாக்கோபு அதை நோக்கங்கொண்டு இருக்கவில்லை என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன்.

13ம் வசனத்தில் இருந்து 16ம் வசனம் வரைக்கும் கூறப்பட்டவற்றிற்கு, 17ம் வசனம் ஒரு முடிவுரைப் புத்திமதியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தங்கள் சிந்தனையற்ற தன்மையால் தவறிப்போயிருந்த சகோதரர்களுக்கு யாக்கோபு எழுதுகிறார்; அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனைப் புறம்பே ஒதுக்கி இருந்தனர். அவர்கள் செய்கிற விஷயம் தவறானதாக இருப்ப தில்லை, ஆனுல் அவர்கள் தேவனையும் அவரது சித்தத்தையும் புறக்கணித்ததே தவறானதாக உள்ளது. அதே வலையில் விழுதல் என்பது நமக்கு மிகவும் கடின மாக இருப்பதில்லை. வாழ்வானது துரிதமானதாக, இறுக்கிப் பிடிப்பதாக மற்றும் நெருக்குதல் நிறைந்ததாக ஆகியுள்ளது. அந்த ஓட்டத்தில் மேற்கொள்ள மற்றும் வெற்றிபெற, நாம் என்ன செய்வோம் என்பது பற்றி நாம் திட்டமிடத் தொடங்குகிறோம் மற்றும் நமது கவனக்குவிப்பானது அடிக்கடி, தேவனைச் சார்ந்திருத்தல் என்பதில் இருந்து சுயத்தை சார்ந்திருத்தல் என்பதற்கு மாறுகிறது. அவர்களின் புறக்கனிப்பை அவர்களுக்கும் மறைமுகமாக நமது புறக்கணிப்பை நமக்கும் யாக்கோபு காண்பித்திருக்கிறார். நமது வழிகளின் தவறை நாம் யாவரும் காணவேண்டுமென்று அவர் வலியுறுத்துகிறார். பிலிப்ஸ் என்பவரின் மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் இந்தக் கருத்தானது மற்ற எல்லா வேதாகம மொழி பெயர்ப்பைக்காட்டிலும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. அவரது மொழி பெயர்ப்பில், “மேற்கண்ட கோட்பாட்டை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு மனிதன் சரியானது எது என்று அறிந்திருந்தும் அதைச் செய்யத் தவறினால், அவனது தோல்வியானது உண்மையான பாவமாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று வாசிக்க முடிகிறது.

## முடிவுரை

வாழ்வு என்பது தேவனிடமிருந்து வருகிற ஒரு கொடையாக உள்ளது, அது அவரது மகிமைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். சாலொமோன், “தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே'' என்று கூறியபோது, இக்கருத்தை ஆணித்தர மாக உணர்த்தினார் (பிரசங்கி 12:13). தேவனுடைய உதவியின்றி எதிர்காலத்தை திட்டமிடுதல் என்ற தவறை நாம் ஏற்படுத்தத் துணிய முடியாது.